**In the Court of the Principal District Judge, Vellore District.**
**Deposition of Witness for P.W.3**
**S.C.138/2017**

| | |
|---|---|
| **Name** | **: Shajakhan** |
| **Father/Husband Name** | **: N.K.Kather Mohideen** |
| **Village** | : பாலப்பட்டி |
| **Taluk** | : மோகனூர் **Tk** |
| **Caste** | : முஸ்லீம் |
| **Calling/Occupation** | : எலக்டிரிசியன் |
| **Religion** | : முஸ்லீம் |
| **Age** | **: 67** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.07.2022.**

முதல் விசாரணை

1. எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசல் ஆதார் அட்டையுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததின் பேரில் அசல் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டது) அ.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் நாமக்கல் மாவட்டம், மோகனூர் தாலுக்கா, பாலப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னுடன், என் மனைவி பரிதாபேகம் வசித்து வருகிறாள். எனக்கு ஒரு மகன், பெயர் ஜமீல்பாஷா, மகள் பெயர் நுவைதா, நர்கிஸ் என்ற மகள்கள் உள்ளனர். என்னுடைய மகன் மற்றும் மகள்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் ஐ.டி. எலக்ட்ரிக்கல் படித்துள்ளேன். 1972 முதல் 1980 வரை நான் ஜபி ஜமில் டேனரியில் எலக்ட்ரிசியனாக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கில் இறந்து போனது, என் மகன் ஜமில்பாஷா ஆகும். கௌஸ்பாஷா மு.க.கொல்லை ஆம்பூர் என்பவர் பெண்ணை, என் மகன் ஜமில் பாஷாவுக்கு திருமணம் செய்துள்ளேன். அதன்பிறகு நான், என் மனைவி, என் மகன் ஜமில் பாஷா, ஜமில் பாஷா மனைவி ஆகியோர்கள் ஈரோட்டிற்கு சென்றோம். என் மகன் கல்யாண் ஜீவல்லர்ஸ்சில் வேலை பார்த்தார். நான் கே.கே.எஸ்.கே. லெதர் டேனரியில் வேலை பார்த்தேன். சுமார் 5

வருடத்திற்கு முன்பு 6ம் மாதம், 12ம் நாள் மாப்பிள்ளை வீட்டில் சீர்வரிசை கொடுப்பதற்காக நாங்கள் ஆம்பூருக்கு வந்தோம். என் மகனும், மருமகளும் குடியாத்தத்தில் என் மருமகளின் பாட்டி இருந்ததால் அங்கு சென்றார்கள். மறுநாள் இருவரும் ஆம்பூருக்கு திரும்பி வந்துவிட்டார்கள். பின்னர் 14.06.2015 அன்று என் மகன் அவரது மாமனார் வீடான ஆம்பூரில் இருந்தார். அதே நாளில் பவித்ரா என்ற ஒரு பெண்ணை காணவில்லை என்றும், கடைசியாக அந்த பெண்ணிடம், என் மகன் தான் பேசியதாக கூறி, பவித்ராவின் உறவினர்கள் நாங்கள் குடியிருந்த ஆம்பூர் வீட்டிற்கு வந்தார்கள். என் மகன் ஏற்கனவே பவித்ராவை அனுப்பி விட்டதாக கூறினார். ஆனால் பவித்ராவின் உறவினர்கள் பவித்ரா திரும்பி வரவில்லை என்று கூறி என் மகனிடம் தகராறு செய்தார்கள். என் மகன், தான் பவித்ராவை அனுப்பிவிட்டதாகவும் அது குறித்து காவல் நிலையத்தில் வந்து சொல்வதாகவும் சொன்னார். ஆனால் பவித்ராவின் உறவினர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. பின்னர் என் மகனை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு கூட்டி சென்றுவிட்டார்கள். அப்போது நானும் சென்றேன். அப்போது பள்ளிகொண்டா காவல் நிலைய ஆய்வாளர் வெளியே சென்றுள்ளதால் அவர்கள், என் மகனை விசாரித்து விட்டு அனுப்புவதாக சொன்னார்கள். அப்போது கௌஸ் பாஷா தான் ஏதோ ஒரு கட்சியில் பெரிய பொறுப்பில் இருப்பதாகவும் தான் பார்த்துக் கொள்வதாக கூறி எங்களை அனுப்பிவிட்டார். அந்த தேதியில் இருந்து என் மகன் இறக்கும்வரை, என் மகனுக்கு பொறுப்பாக அவர்தான் இருந்தார். அதன் பிறகு நாங்கள் ஈரோடிற்கு சென்றுவிட்டோம். அதற்கு பின்னர் என் மகனை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து செல்வதாகவும், பின்னர் அவரை மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் கௌஸ் பாஷா, என்னிடம் சொன்னார். அதன்பேரில் என் மகனை ஆம்பூர் அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தேன். அப்போது என் மகனை பார்த்து விசாரித்தேன். நல்லப்படியாகத்தான் என்னிடம் பேசினார். பின்னர் கௌஸ் பாஷா தான் கட்சியில் பெரிய ஆளாக இருப்பதால் மறியல் செய்தால் தான் வழக்கிலிருந்து என் மகனை விடுவிக்கமுடியும் என்று கூறி தான் மறியல்

செய்யப்போவதாக கூறினார். அதன்பிறகு என் மகனை அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு கூட்டி செல்லலாம் என்று கௌஸ் பாஷா சொன்னார். அதன்படி என் மகனை, அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நான் அங்கு சென்று என் மகனை பார்த்தேன். போலிசார் அடித்ததால் ஏற்பட்ட காயத்திற்காக, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அங்கு என் மனைவி பரிதா பேகம், என் மகனின் மனைவி, கௌஸ் பாஷா மற்றும் அவரது மனைவி இருந்தார்கள். என் மகனை விசாரித்தபோது அவர் நல்லபடியாகத்தான் பேசினார். ஆனால் போலிசார் விசாரித்ததாகவும், தன்னை போலிசார் அடித்துவிட்டதாகவும் கூறினார். அங்கு மருத்துவர்கள், என் மகனை மேல்சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்புவதாக கூறினார்கள். அதன்பேரில் மேலே சொன்ன நாங்கள் அனைவரும் சென்னைக்கு சென்றோம். அங்கு மருத்துவர்கள் அதிக ஆட்கள் வேண்டாம், நாங்கள் சிகிச்சை பார்த்துக் கொள்கிறோம் என்று கூறினார்கள். திடீரென்று என் மகனுக்கு சிகிச்சை பலன் அளிக்கவில்லை என்றும், இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். பின்னர் நீதித்துறை நடுவர் வந்து பிரேதத்தை அடையாளம் காட்டச்சொல்லி புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க சொல்லி என்னிடம் விசாரித்தார். பின்னர் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். அவர் விசாரணை செய்ததற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், கையெழுத்து போட்டேன். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து, பிரேதத்தை என்னிடம் கொடுத்தார்கள். பின்னர் காவல் அதிகாரி பிரேதத்தை போலிஸ் பாதுகாப்புடன் அடக்கம் செய்யச்சொன்னார்கள். ஆம்பூர் நீலக்கொல்லை மசூதியில் பிரேதத்தை அடக்கம் செய்தோம். என் மகனின் இறப்பிற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. என் மகன் இறந்ததது சம்மந்தமாக ஒரு அலி அக்பர் என்பவர் வழக்கு தாக்கல் செய்திருப்பதாக தெரிந்துக்கொண்டேன். ஆனால் அந்த அலி அக்பர் யார் என்று எனக்கு தெரியாது. என்னை சி.பி.சி.ஐ.டி. போலிசார் விசாரித்தார்கள்.

1 மற்றும் 6ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆம்பூர் டவுன் காவல் நிலையத்திற்கு நான் சென்றபோது புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை. வேறு யாரும் புகார் கொடுக்கவில்லை. அதன்பிறகு என் மகனை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு நான் உடன் செல்லவில்லை. 16.06.2015 அன்று நான் ஆம்பூர் டவுன் காவல் நிலையத்தில் என் மகனை பார்த்தபிறகு, 19.06.2015 அன்று மாலை தான் என் மகனை திரும்பவும் பார்த்தேன். அப்போது மாலை 5.30 மணியிலிருந்து 6 மணி இருக்கும். பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து, என் மகனை அவர் நிரபராதி என்று திரும்பி அனுப்பிவிட்டதாக கௌஸ் பாஷா 19.06.2015 அன்று பகல் ஒரு மணிக்கு எனக்கு போன் செய்து சொன்னார். அப்போது நான் ஈரோட்டில் இருந்தேன். அன்றைய தினம் பகல் ஒரு மணியிலிருந்து, 6 மணி வரை என்ன நடந்தது என்று நான் அன்றைய தினம் ரயிலில் ஈரோட்டில் இருந்து ஆம்பூருக்கு வந்துக்கொண்டு இருந்ததால் எனக்கு தெரியாது. என் மகனை மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சேர்த்தார் என்பது குறித்து கௌஸ் பாஷா என்னிடம் சொல்லவில்லை. ஒரு மணியிலிருந்து மாலை 4.30 மணி வரை என் மகனை, கௌஸ் பாஷா எங்கு வைத்திருந்தார் என்று சொல்லவில்லை. என் மகனுக்கு, கௌஸ் பாஷா எங்கு சாப்பாடு வாங்கிக்கொடுத்தார் என்றும் சொல்லவில்லை. நான் ஆம்பூர் அரசு மருத்துவமனியல் என் மகனை பார்த்போது, கௌஸ் பாஷா, தன்னை ஏதேனும் செய்தாரா என்பது குறித்து என் மகன் என்னிடம் சொல்லவில்லை. ஒரு மணி முதல் 4.30 மணி வரை என்ன செய்துக் கொண்டிருந்தார்கள் என்பது குறித்தும் நான் கேட்கவில்லை. பகல் ஒரு மணியளவில் என் மகனை காவல் நிலையத்திலீருந்து கூட்டி வந்து ஒரு இடத்தில் வைத்து அடித்த விவரம் என்னிடம் சொன்னாரா என்றால் என்னிடம் சொல்லவில்லை. கௌஸ் பாஷா தௌபித் தமாத் என்ற கட்சியில் நகர தலைவராக இருப்பதாக சொன்னார். ஏற்கனவே தன்னுடைய மகளை, என் மகன் திருமணம் செய்துவிட்டு மற்றொரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக சொன்னதால் அதுகுறித்து கௌஸ் பாஷா, என் மகன் மீது கோபமாக இருந்தார் என்றால் சரிதான். 19.06.2015 அன்று என் மகனை ஆம்பூர் அரசு மருத்துவமனையில் பார்த்தபிறகு, 3வது நாள்தான் என்

மகனை திரும்ப பார்த்தேன். 19.06.2015 இரவில் இருந்து மறுநாள் மாலை 4.30 மணி வரை என் மகன் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் இல்லை என்ற தகவல் எனக்கு தெரியாது. அதுப்பற்றி கௌஸ் பாஷாவும் சொல்லவில்லை. கௌஸ் பாஷா அந்த ஊரில் பெரிய மனிதர் என்பதால், அவர் சொல்வதை மருத்துவமனை அதிகாரிகள் கேட்பார்கள் என்றால் சரிதான். 19.06.2015 இரவு முதல் மறுநாள் மாலை 4.30 மணி வரை என் மகனை, கௌஸ் பாஷா அழைத்துச் சென்று அடித்து, துன்புறுத்தி, மீண்டும் மாலை 4.30 மணிக்கு என் மகனை மருத்துவமனையில் கொண்டு வந்து விட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் சம்மந்தி மருத்துவமனை முன்பாக அர்த்தால் செய்யப்போவதாக சொன்னார், அதற்கு நான் வேண்டாம் என்று சொன்னேன். நான் கலந்துக் கொள்ளவும் இல்லை. 16.06.2015க்கு பின் 17.06.2015 அன்று என் மகனை, பள்ளி கொண்டா காவல் நிலையத்தில் முதன்முதலாக சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி என்பவர் விசாரித்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 16.06.2015 முதல் 18.06.2015 வரை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்பதை என் மகனோ, கௌஸ் பாஷாவோ என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். 19.06.2015 அன்று கௌஸ்பாஷா, என் மகனை, போலிசார் விசாரித்து நிரபராதி என்றும் சொல்லிவிட்டதாகவும் அவரை நல்லபடியாக கூட்டிகொண்டு வந்துவிட்டதாக என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் போலிசார் அடித்ததாக சொல்லும் விவரங்கள் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. என் மகனும் என்னிடம் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகனின் மரணத்திற்கு, என்னுடைய சம்மந்தி கௌஸ் பாஷா தான் காரணம் என்றால் நீங்கள் சொல்வது போல் நடந்ததா அல்லது தவறான சிகிச்சையினால் இறந்தாரா என்று எனக்கு தெரியாது.

மற்ற எதிரிகள், மேற்படி 1 மற்றும் 6ம் எதிரிகளின் குறுக்கு விசாரணையை அனுசரிக்கிறார்கள்.

மறுவிசாரணை இல்லை.